# பொன்னேரி நகராட்சி

## நகர்மன்ற சாதாரணக்கூட்டம்

பொன்னேரி நகராட்சியின் நகர்மன்ற சாதாரணக்கூட்டம் நகர்மன்றத்தலைவர் திருமதி. கே. பரிமளம் விஸ்வநாதன் அவர்களின் தலைமையில் 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31.03.2022 வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நகர்மன்றக்கூடத்தில் நகர்மன்ற தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் .

பொருள் எண் 1

நடைபெற்ற உள்ளாட்சி தேர்தலில் மாவெரும் வெற்றி பெற்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு பொன்னேரி நகராட்சியின் நகர்மன்ற உறுப்பினர்கள் சார்பாக நன்றி தெரிவித்தல்.

நகர்மன்ற தீர்மாண எண்: 5 நாள்: 31.03.2022

**தீர்மானம்:: பொன்னேரி முதல் நகர் மன்ற சார்பாக ஒருமனதாக நன்றி தெரிவிக்கப்பட்டது.**

பொருள் எண் 2

இந்நகராட்சியின் ஆணையர் அவர்களின் ஜனவரி 2022 , பிப்ரவரி 2022 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- மன்றம் அனுமதி அளிக்கலாம்

நகர்மன்ற தீர்மாண எண்: 6 நாள்: 31.03.2022

தீர்மானம்:: பதிவு செய்யப்பட்டது.

பொருள் எண் 3

இந்நகராட்சியின் பல்வேறு இனங்களின் ஜனவரி 2022 , பிப்ரவரி 2022 மாத செலவுச்சீட்டுகள் மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- மன்றம் அனுமதி அளிக்கலாம்

நகர்மன்ற தீர்மாண எண்: 7 நாள்: 31.03.2022

**தீர்மானம்:: பதிவு செய்யப்பட்டது.**

பொருள் எண் 4

நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகள் தங்கு தடையின்றி நடைபெறவும், குப்பைகள் தேங்காமல் தினந்தோறும், அப்புறப்படுத்தவும், இந்நகராட்சிக்கு

தூய்மைப்பணியாளர்களை வழங்கிவரும் பணியை கிரீன் சர்வீஸ் டிரஸ்ட் நிறுவனம் கடந்த பேரூராட்சி காலம் முதல் பணி மேற்கொண்டுவருகிறது. ஒப்பந்த பணிக்காலம் 31.03.2022 ல் முடிவடைகிறது.

தற்போது பொன்னேரி பேரூராட்சியை நகராட்சியாக தரம் உயர்த்தி தமிழக அரசாணை எண் 116 நாள் 07.12.2021 வாயிலாக அறிவித்ததின்படி நகராட்சி சட்டதிட்டதிற்கு உட்பட்டு நடவடிக்கை எடுக்கவேண்டியுள்ளதாலும், ஒப்பந்தபுள்ளிகள் கோர கால அவகாசம் தேவைப்படுவதாலும், பொது சுகாதார பணிகளின் அவசியத்தை கருத்திற்கொண்டு 01.04.2022 முதல் 30.06.2022 வரை மூன்று மாதத்திற்கு மேற்படி கிரீன் சர்வீஸ் டிரஸ்ட்க்கு நிறுவனத்திற்கே பணி நீட்டிப்பு செய்து பணி மேற்கொள்ளவும் அதற்கான செலவின தொகையை பொதுநிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலக்குறிப்பு :

1. பொதுசுகாதார நலன்கருதி பணி நீட்டிப்பு செய்ய அனுமதிக்கலாம்
2. செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

( ந.க.எண் 102 /2019 /அ1 )

நகர்மன்ற தீர்மாண எண்: 8 நாள்: 31.03.2022

**தீர்மானம்:: ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண் 5</u>

பொன்னேரி நகராட்சியில் பொதுசுகாதார பயன்பாட்டிற்கு தேவையான சுண்ணாம்பு பவுடர், பிளீச்சிங் பவுடர் மற்றும் கிருமி நாசினி பொருட்கள் இருப்பு அளவு குறைவாக இருப்பதால் தேவைக்கு ஏற்ப ஒப்பந்தபுள்ளிகள்/ விலைப்புள்ளிகள் பெற்று கொள்முதல் செய்து கொள்ளவும், உத்தேச செலவினம் ரூ.9.50 இலட்சம் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலக்குறிப்பு :

1. பொதுசுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி அளிக்கலாம்.

( ந.க.எண் 663 /2021 /அ1)

நகர்மன்ற தீர்மாண எண்: 9 நாள்: 31.03.2022

**தீர்மானம்:: ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண் 6</u>

பொன்னேரி பேரூராட்சியாக இருந்தபோது 15வது நிதிக்குழு அடிப்படை மானியம் 2020–21 திட்டத்தில் 15வது நிதிக்குழு மானியம் 2020-21 திட்டத்தில் ரூ.18.00 இலட்சம் மதிப்பீட்டில் அன்னை அவென்யூ பூங்கா மேம்பாடு செய்தல் பணி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி உத்திரவும் ஒப்பந்ததாரர் திரு.ஏ.பாண்டியன் என்பவருக்கு வழங்கப்பட்டது. இந்நிலையில் ஒப்பந்ததாரர் 01.12.2021 ல் இயற்கை எய்தி விட்டதால் பணி தொடர இயலாத நிலையில் மறு ஒப்பந்தபுள்ளி கோர

மன்றத்தின் அனுமதி 25.01.2022 ல் பெறப்பட்டது. தற்போது மறு ஒப்பந்தபுள்ளி கோர ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு செய்திட மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

அலுவலக்குறிப்பு :

1. திட்டப்பணி என்பதால் மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண் 254 /2021 /அ1

நகர்மன்ற தீர்மாண எண்: 10 நாள்: 31.03.2022

**தீர்மானம்:: மறு ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண் 7</u>

இந்நகராட்சியின் தெருவிளக்கு பராமரிப்பு பணிகளுக்கு தேவையான மின்சாதன பொருட்கள் மற்றும் உதிரிபொாருட்கள் சப்ளை செய்ய ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டு ஒப்பந்ததாராக அங்கீகரித்து SMS இன்ஜினியரிங் , பொன்னேரி நிறுவனத்திற்கு சப்ளை உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. தற்போது மேற்படி தெருவிளக்கு பராமரிப்புக்கு தேவையான மின்சாதன பொருட்கள் மற்றும் உதிரிபொருட்கள் இருப்பு குறைவாக உள்ளதால் ஒப்பந்தபுள்ளி கோரும்வரை ஏப்ரல் 2022 முதல் மே 2022 வரையிலான இரண்டு மாதங்களுக்கு தேவையான பொருட்கள் கொள்முதல் செய்திட தோராய செலவினம் ரூ.6.00 இலட்சம் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் , ஒப்பந்ததாரர் SMS இன்ஜினியரிங் , பொன்னேரி நிறுவனத்திற்கு சப்ளை உத்திரவு வழங்கவும், மன்றத்தின் அனுமதிக்கு .

அலுவலக்குறிப்பு : **மன்றம் அனுமதிக்கலாம்**
(ந.க.எண் 45 /2021 /அ1)

நகர்மன்ற தீர்மாண எண்: 11 நாள்: 31.03.2022

**தீர்மானம்:: ஒப்புதல் அளிக்கப்படுகிறது**

<u>பொருள் எண் 8</u>

பொன்னேரி நகராட்சியில் டெங்கு கொசு ஒழிப்பு பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்டுவரும் புகை போக்கி இயந்திரம் அடிக்கடி பழுது ஏற்படுவதால் புதியதாக இரண்டு புகை போக்கி இயந்திரம் ( Pulse Fogg 5 Litre Capacity ) விலைப்புள்ளி அடிப்படையில் வாங்கிக்கொள்ளவும், அதற்கான செலவினம் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு .

அலுவலக்குறிப்பு : **மன்றம் அனுமதிக்கலாம்**
( ந.க.எண் 202 /2022 /அ1)

நகர்மன்ற தீர்மாண எண்: 12 நாள்: 31.03.2022

**தீர்மானம்:: ஒப்புதல் அளிக்கப்படுகிறது**

<u>பொருள் எண் 9</u>

பொன்னேரி நகராட்சியின் 2022-2023ம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டம் மன்றத்தின் பார்வைக்கு.

நகர்மன்ற தீர்மாண எண்: 13 நாள்: 31.03.2022

**தீர்மானம்:: பதிவு செய்யப்பட்டது.**

<u>பொருள் எண் 10</u>

பொன்னேரி நகராட்சியில் நமக்கு நாமே திட்டத்தின்கீழ் அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளிக்கு கணினி 6 எண்ணிக்கை சப்ளை செய்தல் , கண்காணிப்பு கேமராக்கள் 6 எண்ணிக்கை பொருத்துதல் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைத்தல் ( 12000 லி ) ஆகிய பணிகளை ரூ. 10.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்**
( ந.க.எண் 388 /2021 /அ1)

நகர்மன்ற தீர்மாண எண்: 14 நாள்: 31.03.2022

**தீர்மானம்:: ஒப்புதல் அளிக்கப்படுகிறது**

<u>பொருள் எண் 11</u>

பொன்னேரி நகராட்சியில் 15வது நிதிக்குழு மானியத்திட்டத்தில் கீழ்க்காணும் விவரப்படியான அபிவிருத்தி பணிகளுக்கு ரூ. 107.00 இலட்சத்திற்கு 15வது நிதிக்குழு மானியத்திட்டத்தில் 2021-22 ன்கீழ் பிரேரணை அனுப்ப மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எ | பணியின் பெயர் | மதிப்பீடு ( இலட்சத்தில் ) |
|---|---|---|
| 1 | திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு இலகு ரக வாகனம் 2 எண்ணிக்கை வாங்குதல் | 17.00 |
| 2 | திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு பேட்டரி வாகனம் 5 எண்ணிக்கை வாங்குதல் | 9.00 |
| 3 | கொசு ஒழிப்பு இயந்திரம் சப்ளை செய்தல் | 10.00 |
| 4 | மூகாம்பிகை நகர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி சுற்றுச்சுவர் அமைத்தல் மற்றும் பாலாஜி நகர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு பம்பு அறை கட்டுதல் | 17.00 |
| 5 | வள்ளலார் தெரு மற்றும் டி.எ.ச ரோடு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி சுற்றுச்சுவர் அமைத்தல் பம்பு அறை கட்டுதல் | 7.30 |
| 6 | மூகாம்பிகை நகர் மற்றும் பாவேந்தர் தெருவில் 7.5. எச்.பி. மின்மோட்டார் அமைத்தல் , மற்றும் வார்டு எண் 19ல் உளள 5 எச்.பி. மின்மோட்டார் அமைத்தல் | 3.30 |
| 7 | அதாவுல்லாஷா குறுக்கு தெருவில் தார்ச்சாலை அமைத்தல் | 8.50 |

| | | |
|---|---|---|
| 8 | பர்மா நகரில் பேவர்பிளாக் சாலை அமைத்தல் | 6.20 |
| 9 | ஜோதிராமலிங்கம் பின்புறம் பகுதியில் பேவர்பிளாக் சாலை அமைத்தல் | 6.70 |
| 10 | ஆண்டிமுத்தன் தெருவில் பேவர்பிளாக் சாலை அமைத்தல் | 7.00 |
| 11 | ஸ்ரீசக்தி நகரில் பேவர்பிளாக் சாலை அமைத்தல் | 9.50 |
| 12 | பெரியகாவணம் பஜனை கோயில் தெருவில் பேவர்பிளாக் சாலை மற்றும் கால்வாய் , கல்வெர்ட் அமைத்தல் | 5.50 |
| | மொத்தம் | **107.00** |

அலுவலக குறிப்பு :-

ஒப்புதல் அளிக்கலாம்.
( ந.க.எண் 02 /2022 /அ1

நகர்மன்ற தீர்மாண எண்: 15 நாள்: 31.03.2022

**தீர்மானம்:: நிர்வாக அனுமதி கோரி கருத்துரு அனுப்பிட ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண் 12</u>

பொன்னேரி நகராட்சியில் கீழ்க்காணும் விவரப்படியான அபிவிருத்திப்பணிகள் மேற்கொள்ளக்கோரி பொன்னேரி நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டு உறுப்பினர்களிடமிருந்தும் வரப்பெற்ற விண்ணப்பங்கள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | வார்டு எண் | கூட்டப்பொருள் |
|---|---|---|
| 1 | 1 | • பொன்னேரி நகராட்சி 1வது வார்டு கெஜலட்சுமி நகரில் சாலைகள் குண்டும் குழியுமாக உள்ளதால் அப்பகுதிகில் தார்ச்சாலை அமைத்தல்<br>• குன்னமஞ்சேரி பகுதியில் உள்ள டோபிகானா துணி துவைக்கும் தொட்டிகளை மிகவும் பழுதடைந்துள்ளதை பழுதுபார்க்கும் பணி மேற்கொள்ளுதல் |
| 2 | 2 | • அரசூர் ரோட்டில் உள்ள குறுக்கு ரோட்டிற்கு பேவர் பிளாக் சாலை அமைத்தல்<br>• பஜனை கோயில் தெருவில் கழிவுநீர் கால்வாய் சிலாப் அமைத்தல்<br>• ஆற்றங்கரை ரோடு தார்ச்சாலை அமைத்தல் |
| 3 | 3 | • பெரியதம்பி தெருவில் பேவர்பிளாக் சாலை அமைத்தல்<br>• எல்லையம்மன் கோயில் 1வது தெரு, 2வது தெரு மற்றும் 3வது தெரு பேவர்பிளாக் சாலை அமைத்தல் |
| 4 | 4 | • சர்ச் தெருவில் 1வது மற்றும் 2வது தெருக்களுக்கு தார்ச்சாலை அமைத்தல்<br>• சிவன் கோயில் தெருவில் உள்ள பொதுகழிப்பிடம் பழுது பார்த்தல் |
| 5 | 5 | • சோலையம்மன் கோயில் அருகில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு பொதுகழிப்பிடம் அமைத்தல் |
| 6 | 6 | • பாதாள சாக்கடை திட்டட் நிறைவேற்றப்பட்ட அனைத்து தெருக்களையும், தார்ச்சாலையாக மாற்றித்தர வேண்டும் |

| | | |
|---|---|---|
| 7 | 7 | • கள்ளுக்கடைமேடு சமுதாயக்கூடம் அமைக்க வேண்டும் |
| 8 | 8 | • புளியந்தோப்பு பகுதி பொது சுகாதார கழிப்பிடம் அமைத்தல் |
| 9 | 9 | • பெருமாள் கோயில் தெருவில் பொதுகழிப்பிடம் அமைத்தல் |
| 10 | 11 | • தாயுமான் செட்டி தெரு ( விநாயகர் கோயில் பின்புறம் உள்ள தெருக்களுக்கு சிமெண்ட் சாலை அமைத்தல் )<br>• தாயுமான் செட்டி தெரு மழைநீர் கால்வாய் உயரம் அதிகப்படுத்துதல் மற்றும் மூடி அமைத்தல் |
| 11 | 12 | • 12வது வார்டு சிவன்கோயில் தெருவில் குளத்தை சுற்றி மழைநீர் வடிகால் அமைத்தல் |
| 12 | 13 | • கிருஷ்ணசாமி தெருவில் போர்வேல் அமைத்தல் |
| 13 | 14 | • தண்டபாணி தெருவில் ( பிள்ளையார் கோயில் பின்புறம் பேவர் பிளாக் சாலை அமைத்தல் ) |
| 14 | 15 | • அம்பேத்கர் தெரு, பஜனை கோயில் தெரு, பார்த்தசாரதி கோயில் தெரு எட்டியம்மன் கோயில் தெரு சாலை அமைத்தல் |
| 15 | 16 | • டி.எச் ரோட்டில் உள்ள சமுதாயக்கூடம் பழுதுபார்த்தல்<br>• பாதாள சாக்கடை பணிகளால் சேதமடைந்த சாலைகளை விரைவில் சீரமைத்தல் |
| 16 | 17 | • சக்தி நகரில் பூங்கா அமைத்தல் |
| 17 | 18 | • பாலம்மாள் தெருவில் பேவர்பிளாக் சாலை அமைத்தல் |
| 18 | 19 | • நாடார் ரைஸ்மில் ரோடு , கணபதி நகர் , என்.எஸ்.சிபோஸ் தெரு , எம்.பி.ஏ சர்ச் தெரு சாலை அமைத்தல் |
| 19 | 20 | • இளங்கோ தெருவில் தார்ச்சாலை அமைத்தல் |
| 20 | 21 | • குமரன் தெருவில் பெரியார் தெரு தார்சாலை அமைத்தல் |
| 21 | 22 | • எம்.ஜி.ஆர் நகரில் சிமெண்ட் சாலை அமைத்தல் ,<br>• சங்கர் மாருதி நகரில் தார்ச்சாலை அமைத்தல் |
| 22 | 23 | • வெள்ளோடை ரோடு, முனீஸ்வரர் கோயில் அருகில் போர்வெல் அமைத்தல் |
| 23 | 24 | • நக்கீரன் தெரு, கம்பர் தெரு, அவ்வை தெரு, கருமாரியம்மன் தெரு, கண்ணதாசன் தெருவில் தார்சலை அமைத்தல்<br>• துர்கா நகரில் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் பூங்கா அமைத்தல்<br>• பெருமாள் நகரில் தார்ச்சாலை அமைத்தல் |
| 24 | 25 | • கண்ணபிரான் தெருவில் குடிநீர் பைப்லைன் அமைத்தல்<br>• |
| 25 | 26 | • சங்கர் நகரில் தார்ச்சாலை அமைத்தல்<br>• வேண்பாக்கம் பள்ளம் பகுதியில் பொதுசுகாதார கழிப்பிடம் அமைத்தல் |
| 26 | 27 | • மாதவன் நகரில் தார்ச்சாலை அமைத்தல் |
| 27 | பொது | • பொன்னேரி நகராட்சிக்கு உட்பட்ட மழைநீர் கால்வாய் தூர்வார வேண்டும் |

நகர்மன்ற தீர்மாண எண்: 16 நாள்: 31.03.2022

**தீர்மானம்::** பார்வையிடப்பட்டது.

<u>பொருள் எண் 13</u>

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண் 116 நாள் 07.12.2021 -ன்படி பேரூராட்சியாக இருந்த பொன்னேரி நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டதால் நகராட்சி நடைமுறைகள் பின்பற்றிடவும், UTIS மென்பொருள் மூலம் நிர்வாக பணிகள் வரிவசூல் பணிகள், மேற்கொள்ளவும், குடிநீர் விநியோகம் மற்றும் ஆரம்ப கல்வி நிதிக்கு தனியாக வங்கி

கணக்குகள் துவங்கி வசூலிக்கப்படும் தொகைகளை சம்பந்தப்பட்ட வங்கிக்கணக்குகளில் செலுத்திட நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை 28 அவர்களின் 10.03.2022 ம் தேதிய கடிதம் ந.க.எண். 25896 /2021 / IT வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது இந்நகராட்சிக்கு வசூலிக்கப்படும் அனைத்து வரி மற்றும் வரியில்லா இனங்கள் குடிநீர் கட்டணம் உள்ளிட்ட அனைத்து வரவினங்களின் வசூல் தொகைகள் ஒரே வங்கிக்கணக்கில் ( IOB 038001000013581 ) செலுத்தப்பட்டு வருகிறது. நகராட்சிக்கு சொந்தமான பள்ளிகள் இல்லாததால் சொத்துவரியுடன் சேர்த்து ஆரம்ப கல்வி நிதி வசூலிக்கப்படுவதில்லை என்பதால் அதற்கு தனி சேமிபபு கணக்கு தற்போது துவங்க தேவையில்லை என்பதால் குடிநீர் இணைப்புகளின் பேரில் வசூலிக்கப்படும் தொகைகளை செலுத்த புதிதாக ஒரு வங்கி சேமிப்பு கணக்கு துவங்கிடவும், வசூலிக்கப்படும் தொகைகளை அதில் செலுத்திடவும், மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-
மன்றம் அனுமதி வழங்கலாம்.
( ந.க.எண் /2022 /அ1

நகர்மன்ற தீர்மாண எண்: 17 நாள்: 31.03.2022

தீர்மானம் : ஒப்புதல் அளிக்கப்படுகிறது

<u>பொருள் எண் 14</u>

இந்நகராட்சி 27 வார்டுகளில் 21 கிலோ மீட்டர் நீள மழைநீர் கால்வாய் அமைக்கப்பட்டு மழைநீர் மற்றும் குடியிருப்பு, வணிக கட்டிடங்களின் கழிவு,நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. மழையின் காரணமாக சாலைகள் மற்றும் காலி இடங்களிலிருந்து அடித்துச் செல்லப்பட்ட மண் மற்றும் இதர பொருட்கள் மழைநீர் வடிகால்வாயில் நிரம்பியதால் கழிவுநீர் வெளியேற வழியின்றி சாலைகளில் வழிந்தோடி பொது சுகாதார சீர்கேடு விளைவிப்பதாகவும், மழைநீர் வடிகால்வாயில் மண் உள்ளிட்டவற்ளறை அப்புறப்படுத்த (Desilting) தினசரி பொது மக்களிமிருந்தும் நகர மன்ற உறுப்பினர்களிடமிருந்தும் கோரிக்கைகள் வருகிறது.

மேற்படி கால்வாய் தூர் வாருவதற்கு தேவையான பணியாளர்கள் மற்றும் JCB வாகனம் நகராட்சியில் இல்லாததால், உள்ளுர் விலைப்புள்ளிகள் பெற்று பணியாளர்கள் மற்றும் JCB வாகனம் வாடகைக்கு அமர்த்தி தேவையான தெருக்களில் தூர் வாரும் பணிமேற்கொள்ளவும் தோராய செலவினம் ரூ.6.00 இலட்சம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

நகர்மன்ற தீர்மாண எண்: 18 நாள்: 31.03.2022

தீர்மானம்:: ஒப்புதல் அளிக்கப்படுகிறது

<u>பொருள் எண் 15</u>

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை -28 அவர்களின் 08.03.2022–ம் தேதிய கடிதம் ந.க.எண்.5094/2022/டிபி2–ல் தமிழ்நாடு பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் திறந்தவெளி இடங்கள் ( பாதுகாப்பு மற்றும் முறைப்படுத்துதல் ) சட்டம் 1959, பிரிவு 3-ன்படி உள்ளாட்சி எல்லைக்குள் அமைந்துள்ள பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் திறந்தவெளி

இடங்களின் சரியான மற்றும் முழுமையான பட்டியலை அவற்றின் நிலவரைப் படிவம் மற்றும் வரைப்படங்களுடன் தயாரித்து அரசின் ஒப்புதலுக்கு சமர்பிக்க வேண்டும் எனவும், அத்தகைய பட்டியல்கள் அரசால் தமிழ்நாடு பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் திறந்தவெளி இடங்கள் (பாதுகாப்பு மற்றும் முறைப்படுத்துல் ) சட்டம் 1959, பிரிவு 4(1) மற்றும் 4(3) வரையிலான பிரிவுகளின் கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்டு அரசிதழில் வெளியிடப்பட வேண்டியுள்ளதால், இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு மற்றும் நகர் ஊரமைப்பு துறை மூலம் கொள்கை அளவிலான ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள அனுமதியற்ற மனைப்பிரிவுகளில் உள்ள பூங்காக்கள், சிறுவர் விளையாடுமிடம் மற்றும் திறந்தவெளி இடங்களை இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் கண்டுள்ளப்படி அரசிதழில் வெளியிட அரசுக்கு உரிய வழி முறையாக அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது..

| S. No | Use / Name of | | | Name of open space | Location survey Ward No. & T.S.No. | Extent in (Sqft) | Owership ULB / Private | Present Use & Condition | Accessibility | Suitability | Upkeep and Maintenance | If already notified, Mention the GO details |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | Parks | Playfields | Open spaces | | | | | | | | | |
| 1 | Balaji Nagar Park | | - | - | 400/8, 415/pt, 416/pt, 417/pt , 418/pt 419/pt , 420/pt, 421/pt, 447/1 pt , 448/pt | 27516 | ULB | Park and OHT | Yes | Yes | Yes | No |
| 2 | | CPS Near Plot No 40 | - | - | | 250 | ULB | Vacant | Yes | Yes | Yes | No |
| 3 | | Childrens Play Field Plot No 220 | - | - | | 7200 | ULB | School | Yes | Yes | Yes | No |
| 4 | Balaji Nagar Extension | | - | - | 423/2 part | 22000 | ULB | Vacant | Yes | Yes | Yes | No |
| 5 | Lucky Star City | | - | - | 552, 553 /11,12 Venbakkam Village | 5609 | ULB | Vacant | Yes | Yes | Yes | No |
| 6 | Sri Mahendra Avenue | | - | - | S.No.33/2,3,4,5B, 6B, 6C Periyakavanam Village | 1839 | ULB | Vacant | Yes | Yes | Yes | No |

| S. No | Use / Name of | | | Name of open space | Location survey Ward No. & T.S.No. | Extent in (Sqft) | Owership ULB / Private | Present Use & Condition | Accessibility | Suitability | Upkeep and Maintenance | If already notified, Mention the GO details |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | Parks | Playfields | Open spaces | | | | | | | | | |
| 7 | Vinayaga Nagar | | - | - | 172/2A1 Pt Kummangalm Vilalge | 410 | ULB | Vacant | Yes | Yes | Yes | No |
| 8 | Perumal Nagar | | - | - | 221/Pt, 242/pt, 243 / pt Kummangalam Village | 2215 | ULB | Vacant | Yes | Yes | Yes | No |
| 9 | Annai Avenu Park | | - | - | 220/4B1, 4B2 Ponneri Village | 1770 | ULB | Vacant | Yes | Yes | Yes | No |
| 10 | Jain Nagar | | - | - | 458/8, 458/9, Ponneri Village | 1992 | ULB | Vacant | Yes | Yes | Yes | No |
| 11 | Abdul Kalam Nagar Park 1 | | - | - | 201/7B, 9,10 , 202/1A, 1B Kummangalam Village | 15240 | ULB | Vacant | Yes | Yes | Yes | No |
| 12 | Abdul Kalam Nagar Park 2 | | - | - | 201/7B, 9,10 , 202/1A, 1B Kummangalam Village | 1035 | ULB | Vacant | Yes | Yes | Yes | No |
| 13 | Abdul Kalam Nagar Park 2 | | - | - | 201/7B, 9,10 , 202/1A, 1B Kummangalam Village | 1131 | ULB | Vacant | Yes | Yes | Yes | No |
| 14 | Kanniah Nagar | | - | - | 412/1, 414/1 Ponneri Village | 2493 | ULB | Vacant | Yes | Yes | Yes | No |
| 15 | Muthamiz Nagar | | - | - | 194/3,4,,195/1pt,2, 3,196/1A1A1A Kummangalam Village | 442 | ULB | Vacant | Yes | Yes | Yes | No |
| 16 | Balan Nagar Park -1 | | - | - | 437/1,2 Pt 438/1 Ponneri Village | 4090 | ULB | Vacant | Yes | Yes | Yes | No |
| 17 | Balan Nagar Park -2 | | - | - | 437/1,2 Pt 438/1 Ponneri Village | 4578 | ULB | Vacant | Yes | Yes | Yes | No |
| 18 | VIP Park 1 | | - | - | S.No 177/5A,5B,6,7,8, 178/1, 2B, 2C, 3D, 3E, 4, 179/1A, 1B | 14910 | ULB | Vacant | Yes | Yes | Yes | No |
| 19 | VIP Park2 | | - | - | | 5775 | ULB | Vacant | Yes | Yes | Yes | No |
| 20 | VIP Park3 | | - | - | | 22376 | ULB | Vacant | Yes | Yes | Yes | No |
| 21 | K.Raghunathan Park | | - | - | 405/1 | 15362 | ULB | Vacant | Yes | Yes | Yes | No |
| 22 | Kamala Nagar | | - | - | 64/7A | 22080 | ULB | Vacant | Yes | Yes | Yes | No |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 23 | Barathi Nagar | | - | - | 177/5A2 | 20685 | ULB | Vacant | Yes | Yes | Yes | No |
| 24 | Athiya Garden Park 1 | | - | - | S.No 175/Pt, 176/pt, 177/pt | 2280 | ULB | Vacant | Yes | Yes | Yes | No |

நகர்மன்ற தீர்மாண எண்: 19 நாள்: 31.03.2022

**தீர்மானம்:: ஒப்புதல் அளிக்கப்படுகிறது**

**பொருள் எண் 16**

பொன்னேரி நகராட்சியில் குடிநீர் மின்மோட்டார் இயக்கும் தற்காலிகப்பணியில் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளவர்கள் , மாற்றுத்திறனாளிகள் மற்றும் விதவைகளை முன்னுரிமை அடிப்படையில் நியமனம் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

நகர்மன்ற தீர்மாண எண்: 20 நாள்: 31.03.2022

**தீர்மானம்:: முன்னுரிமை அடிப்படையில் நியமனம் செய்ய அனுமதி வேண்டப்படுகிறது.**

**பொருள் எண் 17**

சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தினை விரிவாக்கம் செய்யப்படவேண்டும் என மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்களால் 03.07.2017 அன்று சட்டமன்ற கூட்டத்தில் கோரிக்கை எண் 26ன்படி அறிவிப்பு செய்யப்பட்டதை தொடர்ந்து, அரசு செயலர் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை அவர்களின் கடிதம் ந.க.எண் 15537 / UD1-2017 -3 நாள் 15.03.2017 ல் தெரிவித்துள்ளபடி அரசால் விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள சென்னை பெருநகர் வளர்ச்சி குழும பகுதியுடன் பொன்னேரி நகராட்சி உள்ளுர் திட்ட குழும பகுதியினை இணைத்திட 19.09.2017–ம் தேதிய தீர்மானம் எண்.112-ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்நிலையில் உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அவர்களின் 17.03.2022-ம் தேதிய நேர்முக கடித எண்.C1/11127/2017-3-ல் சென்னை பெருநகர் வளர்ச்சி குழும பகுதியுடன் பொன்னேரி நகராட்சி பகுதியினை சென்னை பெருநகர் வளர்ச்சி பகுதியுடன் இணைக்க உள்ளாட்சி நகர மன்றத்தின் கருத்து பெற்று அனுப்ப தெரிவிக்கப்பட்டுள்ளதை அடுத்து மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : -

சென்னை பெருநகர் வளர்ச்சி குழும பகுதியுடன் ( பொன்னேரி I கிராமம் புல எண்.1 முதல் 234, பொன்னேரி II கிராமம் 235 முதல் 571 வரை மற்றும் சின்னக்காவணம் I கிராமம் புல எண் 90 முதல் 126 வரை மற்றும் 142 முதல் 211 வரை ) உள்ள பகுதிகளை உள்ளடக்கிய பொன்னேரி நகராட்சி / உள்ளுர் திட்ட குழும பகுதியினை இணைத்திட மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்:197/ 2022/அ1)

நகர்மன்ற தீர்மாண எண்: 21 நாள்: 31.03.2022

**தீர்மானம்:: ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

ஒம்) கி. பரிமளம் விசுவநாதன்
நகர்மன்ற தலைவர்,
பொன்னேரி நகராட்சி

/உண்மை நகல்/

ஆணையர்,
பொன்னேரி நகராட்சி,